அங்கன்வாடி மையத்திற்குப் புதிய கட்டடம் தந்தமைக்கு, புதுக்கோட்டை தொகுதி மக்களின் சார்பாகவும், எனது சார்பாகவும் அனு அணுவாக எனது நன்றியைப் பாதம் பணிந்து சமர்ப்பிக்கின்றேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், தங்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்து அமர்கிறேன். நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 170, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. தங்கவேல், மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

170—

சிறப்பு முகாம்

***7910—திரு. கே. தங்கவேல்:**

மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதிய குடும்ப அட்டை கோரி விண்ணப்பித்தவர்களுக்கென சிறப்பு முகாம்கள் நடத்த அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

புதிய குடும்ப அட்டை கோரி விண்ணப்பம் செய்தவர்களில், குடும்ப அட்டை பெற தகுதி பெற்றவர்களுக்கு இரண்டு மாதத்திற்குள் புதிய குடும்ப அட்டை வழங்கப்பட்டு வருகிறது. மேலும், சென்னை மாவட்டத்தில் மாதத்தின் இரண்டாம் சனிக்கிழமையிலும், ஏனைய மாவட்டங்களில் மாதத்தின் இரண்டாம் வெள்ளிக்கிழமையிலும் நடத்தப்படும் குடும்ப அட்டைதாரர்கள் குறைதீர் முகாமில் மனுக்கள் பெறப்பட்டு, கால வரம்பிற்குள் தீர்வு செய்யப்படுகின்றது. ஏற்கெனவே, மாதந்தோறும் பொது விநியோகத் திட்ட குறைதீர் கூட்டங்கள் நடத்தப்பட்டு வருவதாலும், தகுதியுள்ள மனுதாரர்களுக்குக் குடும்ப அட்டைகள் அச்சிட்டு வழங்கப்பட்டு வருவதாலும், நிலுவை மனுக்கள்மீது நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாலும், புதிய குடும்ப அட்டைகளுக்காக சிறப்பு முகாம்கள் நடத்த வேண்டிய அவசியம் எழவில்லை என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2014 ஜூலை 17]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. தங்கவேல் அவர்கள்.

திரு. கே. தங்கவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூர் மாவட்டத்தில் புதிய குடும்ப அட்டை வேண்டி ஆண்டுக்கு சுமார் 25,000 மனுக்கள் பெறப்படுகின்றன. அவற்றில் சரிபாதி விண்ணப்பங்கள் திருப்பூர் வட்டத்தில் மட்டும் வருகிறது. திருப்பூர் மாநகரின் வளர்ச்சி, தொழில் நிலைமைக்கேற்ப அரசு நிருவாக வசதியை ஏற்படுத்தாததால், புதிய குடும்ப அட்டை பெறுவதில் காலதாமதம் நிலவுகிறது. ஓராண்டு முதல் அதிகபட்சமாக நான்காண்டுகள் வரை காத்திருக்கின்றனர். இந்தச் சூழலில், திருப்பூர் வட்டம், வடக்கு, தெற்கு என இரண்டாகப் பிரிக்கப்பட்டிருப்பினும், உரிய எண்ணிக்கையில் பணியிடங்கள் ஏற்படுத்தாததால், பிரச்சினை தீரவில்லை. மேலும், புதிய குடும்ப அட்டைகள் கோவையில் மட்டும் அச்சாகின்றன. சரிபார்க்கும் அதிகாரியோ ஈரோட்டில் இருக்கிறார். இவையெல்லாம் தேவையற்ற காலதாமதத்தை ஏற்படுத்துகின்றன. இந்த நிருவாகப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதுடன், உரிய எண்ணிக்கையில் பணியாளர்களை நியமித்து, புதிய குடும்ப அட்டை குறித்த காலத்தில் கிடைக்கும்விதத்தில் சிறப்பு முகாம் நடத்த அரசு ஆவன செய்ய வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10-30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குடும்ப அட்டைக்காக ஓராண்டு, ஈராண்டுகள் காத்திருக்கக்கூடிய சூழ்நிலை இருக்கிறது என்கிற ஒரு தவறான தகவலை அவையின்முன் வைத்திருக்கிறார்கள். குடும்ப அட்டையைப் பொறுத்தவரையில், குடும்ப அட்டை கோரி விண்ணப்பித்த அனைவருக்கும் 60 நாட்களுக்குள்ளாக குடும்ப அட்டை வழங்க வேண்டுமென மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். உரிய ஆவணங்களுடன் புதிய குடும்ப அட்டை கோரி மனுச் செய்த அனைவருக்கும், உரிய விசாரணைக்குப்பின், 60 நாட்களுக்குள்ளாக குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டு, அவர்களுக்கு உரிய

பொருட்கள் கிடைப்பதற்குரிய வாய்ப்பை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு தொடர்ந்து வழங்கிக் கொண்டிருக்கிறது என்பதனை இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் திருப்பூர் மாவட்டத்தைப்பற்றிச் சொன்னார்கள். திருப்பூர் மாவட்டத்தில் 1-6-2011 முதல் 30-6-2014 வரை குடும்ப அட்டை கோரி பெறப்பட்ட மனுக்கள் 57,638; அவற்றில் விசாரணை செய்யப்பட்டவை 56,605; பரிந்துரை செய்யப்பட்டவை 46,749; உரிய ஆவணங்கள் இல்லாத நிலையில் தள்ளுபடி செய்யப்பட்டவை 9,856; விசாரணை செய்யப்பட வேண்டிய மீதமுள்ள மனுக்கள் 1,033; 60 நாட்களுக்கு மேலாக ஒரு மனுகூட நிலுவையில் இல்லை; 30 நாட்களுக்கு மேல் 60 நாட்களுக்குள் மனு எதுவும் நிலுவையில் இல்லை. 30 நாட்களுக்குள் நிலுவையிலுள்ள மனுக்கள் 1,033 மட்டுமே என்பதனை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதுமட்டுமல்லாமல், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிக்கு வந்தபொழுது, திருப்பூரிலே அப்பொழுது புழக்கத்தில் இருந்த குடும்ப அட்டைகளின் எண்ணிக்கை 28,294. மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிக்கு வந்ததற்குப் பின்னால் புதிதாகக் கொடுக்கப்பட்ட குடும்ப அட்டைகள் 14,005. 28,294 அட்டைகள் புழக்கத்தில் இருந்த மாவட்டத்தில் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிக்கு வந்ததற்குப் பின்னால் 14,005 குடும்ப அட்டைகள் புதிதாகக் கொடுக்கப்பட்டிருக்கின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. தங்கவேல் அவர்கள்.

திரு. கே. தங்கவேல்: மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்கு நன்றி. ஆனால், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் திரு. சுப்பராயன் அவர்களுடைய மகன் திரு. பாரதி என்பவர் குடும்ப அட்டை கோரி மனு அளித்து, ஆறு மாத

காலத்திற்கும்மேல் ஆகிறது. நானே தாசில்தாரிடத்திலே இரண்டுமுறை பேசியிருக்கிறேன். அவருடைய பெற்றோரின் குடும்ப அட்டையிலிருந்து அவரது பெயரை விடுவித்தும், அவரது மனைவியின் பெற்றோரின் குடும்ப அட்டையிலிருந்து அவரது மனைவியின் பெயரை விடுவித்தும் உரிய ஆவணங்களுடன் விண்ணப்பம் அளிக்கப்பட்டிருக்கிறது. இதேபோன்று ஏராளமான மனுக்கள் நிலுவையில் இருக்கின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அதிகாரிகள் சொல்வது முழுவதும் சரியானதா என்பதைப் பார்த்துவிட்டுச் சொல்ல வேண்டும்.

மதுரை போன்ற தென் மாவட்டங்களிலிருந்து ஏராளமானவர்கள் குடிபெயர்ந்து திருப்பூர் நகரத்தில் வந்து தங்குகிறார்கள். அவர்கள் குடும்ப அட்டை கோரி விண்ணப்பிக்கும்போது, சம்பந்தப்பட்ட மாவட்டங்களிலிருந்து தஸ்தாவேஜுகளைப் பெற்று சமர்ப்பிக்கிறார்கள். ஆனால், அவர்களுக்குக் குடும்ப அட்டைகள் வழங்குவது என்பது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லுகிற அடிப்படையில் நடைமுறையில் இருக்கிறதா என்பதை ஆய்வு செய்ய வேண்டுமெனத் தாழ்மையோடு கேட்டுக்கொள்கிறேன். 60 நாட்களுக்குள் குடும்ப அட்டைகள் கொடுப்பது என்பது அநேகமாக இல்லை என்பதை நான் பதிவு செய்ய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு பெயரைக் குறிப்பிட்டு, உரிய நபருக்குச் சரியான நேரத்தில் குடும்ப அட்டை கிடைக்கவில்லையென இங்கு குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்த நபர் உரிய ஆவணங்களை முழுவதுமாக சமர்ப்பித்திருக்கமாட்டார் என்பதுதான் வழங்கப்படாததற்குக் காரணமாக இருக்க முடியும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒருவர் குடும்ப அட்டை வேண்டி விண்ணப்பிக்கும்போது, பெயர் நீக்கச் சான்று, முந்தைய குடும்ப அட்டையில் ஒப்பளிப்பு செய்த சான்று அல்லது இதுவரை குடும்ப அட்டை பெறவில்லை என்ற சான்று, ஒரே முகவரியில் ஐந்து வருடங்கள் வசித்தும் குடும்ப அட்டை பெறவில்லையெனில் அதற்கான காரணம் ஆதாரத்துடன், வாக்காளர் அடையாள அட்டை அல்லது ஏதாவது ஒரு

அடையாள அட்டை போன்ற முழு ஆவணங்களுடன் விண்ணப்பிக்கும்போதுதான் அவருக்குக் குடும்ப அட்டை வழங்கப்படுகிறது. உரிய விசாரணைக்குப் பின்னால்தான் குடும்ப அட்டைகள் வழங்கப்படுகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிற அந்த நபருக்கு என்ன காரணத்தினால் குடும்ப அட்டை வழங்கப்படவில்லை என்பதை ஆய்வு செய்து, குடும்ப அட்டை வழங்குவதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-35

கூடுதலாக ஒரு தகவலையும் அவைக்குத் தெரிவிக்க விரும்புகிறேன். மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சியிலேதான் குடும்ப அட்டைதாரர்கள் அனைவருக்கும் 20 கிலோ அரிசி விலையில்லாமல் வழங்கப்படுகிறது. ஃபேன், மிக்சி, கிரைண்டர்கள் வழங்கப்படுகின்றன. இதனால் குடும்ப அட்டை கோரி விண்ணப்பிப்பவர்களின் எண்ணிக்கை அதிகமாக இருக்கிறது.

இந்தப் பொருட்களையெல்லாம் தாங்களும் பெறவேண்டும் என்பதற்காக, ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இரண்டு, மூன்று பேர் மனு செய்யக்கூடிய ஒரு சூழ்நிலைகூட இருக்கிறது. இதுதான் மனுதாரர்களுடைய மனுக்களை உடனடியாகப் பரிசீலிக்கப்படாததற்கும், அவர்களுக்கு உடனடியாகக் குடும்ப அட்டை வழங்கப்படாததற்கும் காரணமாக இருக்கிறது. எனவே, மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சிக் காலத்தில் 60 நாட்களுக்குள் உரியவர்களுக்கு, உரிய விசாரணை செய்து, குடும்ப அட்டைகள் வழங்கப்படும் என்கிற உத்தரவாதத்தை மீண்டும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 171, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.கே. செல்வராஜு, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.